ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருʼதி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ எங்ஙனேயோ ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ எங்ஙனேயோ ॥

உருவெளிப்பாடு கண்ட தலைவி தாயை மறுத்துரைத்தல்

‡எங்ஙனேயோ அன்னைமீர்காள்!⋆ என்னை முனிவது நீர்⋆
நங்கள் கோலத் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்ட பின்⋆
சங்கினோடும் நேமியோடும்⋆ தாமரைக் கண்களோடும்⋆
செங்கனி வாய் ஒன்றினோடும்⋆ செல்கின்றதென் நெஞ்சமே (1)

என் நெஞ்சினால் நோக்கிக் காணீர்⋆ என்னை முனியாதே⋆
தென் நன் சோலைத் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்ட பின்⋆
மின்னும் நூலும் குண்டலமும்⋆ மார்வில் திருமறுவும்⋆
மன்னு பூணும் நான்கு தோளும்⋆ வந்தெங்கும் நின்றிடுமே (2)

நின்றிடும் திசைக்கும் நையும் என்று⋆ அன்னையரும் முனிதிர்⋆
குன்ற மாடத் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்ட பின்⋆
வென்றி வில்லும் தண்டும் வாளும்⋆ சக்கரமும் சங்கமும்⋆
நின்று தோன்றிக் கண்ணுள் நீங்கா⋆ நெஞ்சுள்ளும் நீங்காவே (3)

நீங்க நில்லாக் கண்ண நீர்கள் என்று⋆ அன்னையரும் முனிதிர்⋆
தேன் கொள் சோலைத் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்ட பின்⋆
பூந் தண் மாலைத் தண் துழாயும்⋆ பொன் முடியும் வடிவும்⋆
பாங்கு தோன்றும் பட்டும் நாணும்⋆ பாவியேன் பக்கத்தவே (4)

பக்கம் நோக்கி நிற்கும் நையும் என்று⋆ அன்னையரும் முனிதிர்⋆
தக்க கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்ட பின்⋆
தொக்கசோதித் தொண்டை வாயும்⋆ நீண்ட புருவங்களும்⋆
தக்க தாமரைக் கண்ணும்⋆ பாவியேன் ஆவியின் மேலனவே (5)

மேலும் வன் பழி நங்குடிக்கிவள் என்று⋆ அன்னை காணக் கொடாள்⋆
சோலை சூழ் தண் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்ட பின்⋆
கோல நீள் கொடி மூக்கும்⋆ தாமரைக் கண்ணும் கனி வாயும்⋆
நீல மேனியும் நான்கு தோளும்⋆ என் நெஞ்சம் நிறைந்தனவே (6)

www.prapatti.com

நிறைந்த வன் பழி நம் குடிக்கிவள் என்று⋆ அன்னை காணக்கொடாள்⋆
சிறந்த கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்ட பின்⋆
நிறைந்த சோதி வெள்ளம் சூழ்ந்த⋆ நீண்ட பொன் மேனியொடும்⋆
நிறைந்தென் உள்ளேநின்றொழிந்தான்⋆ நேமி அங்கை உளதே (7)

கையுள் நன் முகம் வைக்கும் நையும் என்று⋆
அன்னையரும் முனிதிர்⋆
மை கொள் மாடத் திருக்குறுங்குடி நம்பியை⋆
நான் கண்ட பின்⋆
செய்ய தாமரைக் கண்ணும் அல்குலும்⋆
சிற்றிடையும் வடிவும்⋆
மொய்ய நீள் குழல் தாழ்ந்த தோள்களும்⋆
பாவியேன் முன்நிற்குமே (8)

முன் நின்றாய் என்று தோழி மார்களும்⋆ அன்னையரும் முனிதிர்⋆
மன்னு மாடத் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்ட பின்⋆
சென்னி நீள் முடி ஆதியாய⋆ உலப்பிலணி கலத்தன்⋆
கன்னல் பால் அமுதாகி வந்து⋆ என் நெஞ்சம் கழியானே (9)

கழிய மிக்கதோர் காதலள் இவள் என்று⋆ அன்னை காணக்கொடாள்⋆
வழுவில் கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்ட பின்⋆
குழுமித் தேவர் குழாங்கள்⋆ கை தொழச் சோதி வெள்ளத்தினுள்ளே⋆
எழுவதோர் உருவென்னெஞ்சுள் எழும்⋆ ஆர்க்கும் அறிவரிதே (10)

‡அறிவரிய பிரானை⋆
ஆழி அங்கையனையே அலற்றி⋆
நறிய நல் மலர் நாடி⋆
நன் குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
குறி கொள் ஆயிரத்துள் இவை பத்தும்⋆
திருக்குறுங்குடி அதன் மேல்⋆
அறியக் கற்று வல்லார் வைட்ணவர்⋆
ஆழ் கடல் ஞாலத்துள்ளே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com